முருகப்பெருமான் துணை

**மகான் டமாரானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.11.2022**, புதன்கிழமை

1. தருமராஜனே ஞானத் தலைவனே
தவபலமாக வந்த அரங்கனே
பெருமைமிக்க நல்லுலகம் அமைய
பிரணவக் குடில் படைத்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
ஆசிபட சுபகிருது தேள் திங்கள்
அறிவிக்க முன்னான்கீர் திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 14 ம் நாள் 30.11.2022, புதன்கிழமை)
3. வாரமதில் டமாரானந்தர் யானும்
வையகம் தானும் நலம்பெற உரைப்பேன்
சோரமில்லா ஞானவான்கள் படை
சுத்தநெறி கொண்டு அமைக்கவே
4. அமைக்கவே சன்மார்க்க நெறிதனை
அகிலமே ஏற்று நடக்கவே
வகையான வேதமாக அருளி
வல்லமைபட தருமம்தனை சேர்த்து
5. சேர்த்துமே உலகை வதைக்கும்
சிறப்பிலா பசிபிணி விரட்டி
நேர்த்தியாக ஞானிகள் பூசையை
நிலவுலகில் செய்து வருகின்ற
6. வருகின்ற அரங்கன் வழிகளை
வையகம் ஏற்றாலே போதும்
தரும நெறி எங்கிலும் பரவி
தயவான மக்களாய் உலகோர் மாறி
7. மாறியே அற்புதம் தன்னை
மண்ணுலகம் சடுதி காணும்
ஆறுமுகனார் அரங்கன் வழி
அறம்வளர்த்து அதிசயம் நடத்தி வர
8. வருகவே உலக மக்கள் தானும்
வணங்கி பிரணவ குடிலுக்கு வர
தருகின்ற தயவு குணம் பெருகி
தகாத குணக்கேடுகள் விலகி
9. விலகியே தன்னலமிலா வாழ்வாக
வினைவெல்லும் பொது நலம் கூடி
கலகம் துன்பம் அழிவில்லா
காப்பான வாழ்வாய் கண்டு

10. கண்டுமே கலியுக மக்கள்
கந்தவேலன் ஆசிக்குரியவர்களாக
தொண்டுமிக்க அரங்கமகானால்
தேர்வு கண்ட ஞானிகளாக

11. ஆகவே ஆற்றல் பெருகியே
அகிலத்தில் ஞானிகள் படைபெருகி
செகமே ஞானலோகம் ஆகும்
சிறந்த ஞான ஆட்சி மலரும்

அனுகூல ஆசி முற்றே

—சுபம்—